# பிரிக்ஸ் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டம் குறித்த செய்தி வெளியீடு (நியூயார்க், 2014 செப்டம்பர் 25)

**செப்டம்பர் 26, 2014**

பிரிக்ஸ் நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள், ஐக்கிய நாடுகள் சபையின் பொது சபை 69 வது அமர்வு விளிம்புகளில் 25 செப்டம்பர் 2014 அன்று கூடியது.

வெளிப்படைத்தன்மை, இணைந்தியற்றல் மற்றும் பரஸ்பர நன்மை பயக்கும் ஒத்துழைப்பு உணர்வில், அமைச்சர்கள் விரிவான ஒத்துழைப்பு மற்றும் ஒரு நெருக்கமான பொருளாதார கூட்டாண்மை குறித்து பிரிக்ஸ் அமைப்பிற்கான அர்ப்பணிப்பை பற்றி வலியுறுத்தினார்.

அமைச்சர்கள் ஆறாம் உச்சி மாநாட்டை ஏற்பாடு செய்த பிரேசில் நாட்டை பாராட்டியத்தோடு,அவர்கள் போர்தலேஜா செயல் திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருவதையும் குறிப்பிட்டனர். புதிய அபிவிருத்தி வங்கி மற்றும் அவசர இருப்பு ஒதுக்கீட்டு ஏற்பாடு நிறுவ இந்த மாநாட்டில் எடுக்கபட்ட முடிவு பிரிக்ஸ் ஒத்துழைப்பை ஒரு

புதிய நிலைக்கு உயர்த்தும் என்பதை அவர்கள் வலியுறுத்தினார். போர்தலேஜா பிரகடனத்தில் குறிபிட்டது போல் இண்ட்ரா-பிரிக்ஸ் பொருளாதார, வர்த்தக மற்றும் முதலீட்டு ஒத்துழைப்பை முன்னேர்ருவிக்க உடனடியாக ஒரு கூட்டதை கூட்டுமாறு அமைச்சர்கள் வலியுறுத்தினார்.

தற்போதைய ஐக்கிய நாடுகள் செயற்பட்டியலின் பிரச்சினைகளை விவாதித்து போது, அமைச்சர்கள் பின்வருவனவற்றை வலியுறுத்தினர்:

ஐக்கிய நாடுகள் சபை ஸ்தாபிக்கப்பட்டு 70 வது ஆண்டு நிறைவு மற்றும் இரண்டாம் உலகப் போரின் இறுதி 2015 என்பதையும் அமைச்சர்கள் நினைவு கூர்ந்தனர். மனித வரலாற்றில் உள்ள இந்த இரண்டு வரலாற்று தருணங்களுக்கு அஞ்சலி செலுத்தும் நினைவு நிகழ்ச்சிகளை துவக்கி ஏற்பாடு செய்வதற்கு அவர்கள் ஐ.நா.விற்கு ஆதரவு தெரிவித்தனர். மேலும் ஐ.நா. சாசனம் அடிப்படையில் ஒரு நியாயமான, நேர்மையான சர்வதேச ஒழுங்குமுறையை பாதுகாக்க மற்றும் மனித முன்னேற்றம் மற்றும் அபிவிருத்தியை ஊக்குவிபது குறித்து பிரிக்ஸ்(BRICS) உறுப்பினர்கள் எடுத்துள்ள உறுதிப்பாட்டை மேலும் உறுதி செய்தனர். போதுமான உலகளாவிய சவால்களுக்கு பதிலளிக்கவும்,மேலும் பிரதிநிதித்துவம் உள்ள பயனுள்ள மற்றும் திறமையானதாகவும்,பாதுகாப்பு சபை உட்பட ஐ.நா.

தொடர்பாக ஒரு விரிவான சீர்திருத்தம் தேவை என்பதையும் அவர்கள் வலியுறுத்தினர்.

போர் நிறுத்த ஆட்சியை பாதுகாக்க மற்றும் காசா பகுதிகளில் ஒரு நிலையான சமாதான நிலை அடையவும் அத்துடன் படை பயன்படுத்தப்பட்டு மேலும் வரக்கூடிய நிகழ்வுகளை தடுக்க தங்களால் மிகுந்ததை செய்ய இஸ்ரேலிய மற்றும் பாலஸ்தீனிய தரப்பினரை அவர்கள் அழைத்தனர். போர் நிறுத்துவதற்கான நடவடிக்கைகளில் எகிப்து நாட்டின் பங்கை அவர்கள் மிகவும் பாராட்டினார்கள். சர்வதேச சட்டம் மற்றும் பொருத்தமான ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானங்களை அடிப்படையாக இஸ்ரேலியர்கள் மற்றும் பாலஸ்தீனியர்கள் இடையே பேச்சுவார்த்தைகள் உடனடியாக மீண்டும் தொடங்க பிரிக்ஸ் (BRICS) உறுப்பு நாடுகள் தங்கள் ஆதரவை தெரிவித்தனர். 1967 எல்லைகள் அடிப்படையிலான ஒரு சுயாதீனமான, மற்றும் அருகாமையில் பாலஸ்தீன மாநிலம் அமையவும் மற்றும் இஸ்ரேல் மற்றும் அனைத்து அண்டை நாடுகளுடன் பாதுகாப்பு மற்றும் சமாதானத்தில் பக்க துணையாக இருக்கவும் பிரிக்ஸ் (BRICS) உறுப்பு நாடுகள் தங்கள் ஆதரவை தெரிவித்தனர். அவர்கள் இந்த இலக்கை அடைவது நோக்கி முயற்சிகளை தீவிரப்படுத்த, குறிப்பாக ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை மற்றும் சர்வதேச சமூகத்திற்கு அழைப்பு விடுத்தனர்.

அவர்கள் காசாவில் பெருகிவரும் கனமான மனிதாபிமான நிலவரம் குறித்து கவலை தெரிவித்தனர். இந்த அக்டோபர் மாதத்தில் கைரோவில் காசா மறு கட்டு அமைப்பிற்காக ஒரு சர்வதேச நன்கொடையாளர் மாநாடு நடத்த எகிப்து மற்றும் நோர்வே எடுத்துள்ள திட்டங்களுக்கு ஆதரவு தெரிவித்தனர்.இத்தகைய முயற்சிகளின் செயல்பாடுகள் பாலஸ்தீனிய நல்லிணக்கத்தை முன்னேற்றுவதற்கும் காசா மீது முற்றுகையை உயர்த்துவதற்காண உடனடி நடவடிக்கைகளுடன் இணைந்து இருக்கவேண்டும் என்பதை அமைச்சர்கள் வலியுறுத்தினார். பாலஸ்தீன விடுதலை அமைப்பு மற்றும் அரபு சமாதான முயற்சியின் அரசியல் அடிப்படையில் பாலஸ்தீனிய நிர்வாக ஒற்றுமையை மீட்கஏ இது செயல்படும்.

இரு ஆப்கானிய தலைவர்களுக்கும் இடையிலான உடன்பாட்டையும் ஒரு வலுவான அபிவிருத்தி மற்றும் சமாதான தேசத்தை கட்டியெழுப்பும் பணியை மேற்கொண்டிருப்பதற்கும் ஆப்கானிஸ்தானிய புதிய அரசாங்கத்திற்கு அமைச்சர்கள் ஆதரவு தெரிவித்து வரவேற்றனர். எதிர்மறையாக சில நாடுகளின் பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையை பாதிக்கும் ஆப்ரிக்கா போராட்டப் பகுதிகள்ள குறித்து அமைச்சர்கள் தீவிர கவலை தெரிவித்தனர். ஆப்பிரிக்க ஒன்றியம் மற்றும் அதன் அமைதி மற்றும் பாதுகாப்புக் குழுவின் மூலம் ஐ.நா. மற்றும் சர்வதேச சமூகத்தின் தீவிர ஆதரவுடன் ஆப்பிரிக்கர்கள்

தங்கள் ஆபிரிக்க மோதல்களை சமாளிக்க வேண்டும் என்ற தங்கள் பொதுவான கருத்தை அவர்கள் வெளியிட்டனர்.

நெருக்கடிகளுக்கு உடனடியான பதில் (ACIRC) மற்றும் ஆப்பிரிக்க காத்திருக்கும் படை பின்னர் நிறுவப்படவும் உடனடியாக இடைக்கால ஆப்பிரிக்க கொள்ளளவு நடைமுறையை அமைக்கும் முயற்சிகளை ஒன்று சேர்ந்து ஆய்வு செய்ய பிரிக்ஸ் (BRICS) நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் தங்கள் ஆர்வத்தை தெரிவித்தனர்.

எபோலா வைரஸின் திடீர் தாக்கம் BRICS உறுப்பு நாடுகள் மற்றும் மேற்கு ஆப்பிரிக்க நாடுகளில் இருப்பதை குறித்து அவர்கள் பெரும் கவலை தெரிவித்தனர். அமைச்சர்கள் நோய் பரவுவதை கட்டுப்படுத்த வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்தினர். பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு உதவ மற்றும் இந்த நெருக்கடியை திறம்பட சமாளிக்க உலக சுகாதார மையம் (WHO) மற்றும் அனைத்து தொடர்புடைய ஐ.நா. அமைப்பு நிறுவனங்கள் ஒரு அவசர மற்றும் விரிவான ஆதரவை தந்து உதவ அமைச்சர்கள் அழைப்பு விடுத்தனர். இது சம்பந்தமாக, ஐ.நா. மிஷன் அவசர எபோலா பிரதிசெயல் ஸ்தாபனத்ததை அவர்கள் வரவேற்றனர். இந்த சூழலில், 25 செப்டம்பர் 2014 அன்று பொது செயலாளர் அவர்களால் கூட்டப்பட்ட ஐ.நா. எபோலா திடீர் தக்க விடையிறுக்கும் உயர் நிலை கூட்டத்தை அவர்கள்

ஆதரித்தனர். பிரிக்ஸ்(BRICS) நாடுகள் யாவையும் இந்த நோய்க்கு எதிரான சர்வதேச முயற்சியை எடுத்துள்ளது.

உக்ரைனில் அமைதி மற்றும் நிலைத்தன்மை ஆகியவற்றின் முக்கியத்துவத்தை அமைச்சற்கள் அடிக்கோடிட்டனர். செப்டம்பர் 4, 2014 அன்று மூன்று நாடுகளுக்கிடையிலான தொடர்பு குழுமத்தின் ஆலோசனைகளின் முடிவு நெறிமுறைக்கான ஒப்பந்தத்தை அவர்கள் வரவேற்றனர். செப்டம்பர் 20, 2014 அன்று அத்தகைய நெறிமுறையை செயல்படுத்த ஒப்பந்தம் கையெழுத்திட்டத்தையும் அவர்கள் வரவேற்றனர். இந்த ஆவணங்களின் விதிகளை இணக்கமாய் கொள்ள வேண்டும் என்று அவர்கள் நம்பிக்கை தெரிவித்தனர்.

வெளிநாட்டு பயங்கரவாத கிளர்ச்சிக்காரர்கள் மீது செப்டம்பர் 24, 2014 அன்று ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை கொண்டு வந்துள்ள தீர்மானத்திற்கு அமைச்சர்கள் ஆதரவு தெரிவித்தனர். வெளிநாட்டு பயங்கரவாத கிளர்ச்சிக்காரர்களின் அச்சுறுத்தல்களை பற்றி முன்வைக்கையில்,அவர்களின் ஆட்ஸ்ர்ப்பை தடுப்பது மற்றும் அவர்களுக்கு நிதிஆதர்வு தடை செய்வது மற்றும் எல்லைகளை கடந்து அவர்களின் நடமாற்றம் ஆகியவைகளை பற்றி முன்வைக்கும் முயற்சிகளில் சர்வதேச சமூகம் ஒத்துழைக்க அவர்கள் அழைப்பு விடுத்தனர்.

யூஃபா நகரில் 2015 இல் VII ஏழாவது பிரிக்ஸ்(BRICS) உச்சிமாநாட்டின் ஏற்பாடுகளை அதன் பங்காளர்களுக்கு ரஷிய பக்கம் விரிவாக விளக்கியது. ஆயத்த செயல்முறையின் போது ரஷியா தலைமையினால் பகிர்ந்து கொள்ள வேண்டிய புதிய பகுதிகளை மற்றும் ஒத்துழைப்பு வடிவங்களை மெருகேற்றுவதோடு ,சங்கத்தின் மூலோபாய கவனத் தொடர்ச்சியை உறுதி செய்ய ரஷியா அதன் விருப்பத்தை வலியுறுத்தியது.

தரப்பினர்கள் ஐ.நா. பொது சபையின் 69 வது கூட்டத்தொடரில் ஒருவருக்கொருவர் எடுக்கும் முயற்சிகளுக்கான ஆதரவு சாத்தியக்கூறுகள் பற்றி விவாதித்தனர்.

**நியூயார்க்,**

**செப்டம்பர் 25, 2014**